# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | **S.C.No.117/2017** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | **அ.சா– 11 ( PW– 11 )** |
| **பெயர்** | :– | **மாதேஷ்** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | **அர்ச்சுன்** |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 15 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரி தோன்றினார். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை**

நான் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பொன்நகரில் வசிக்கிறேன். கூலி வேலைசெய்கிறேன். நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரியை தெரியாது. இறந்துபோன இளமுருகனை எனக்குத் தெரியாது. இந்த வழக்கு நிகழ்வு குறித்து எனக்குத் எதுவும் தெரியாது. காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

எங்கள் ஊரில் குடியிருக்கும் ராஜா என்பவரின் மகன் பிரகாஷ் என்கிற சிவபிரகாஷ் என்பவரை தெரியும் என்றும் மேட்டூரில் உள்ள ரவுடிகளுடன் அடிதடி வழக்குகளில் அடிக்கடி சிறை சென்றுவருவார் என்றும் திருச்செங்கோட்டை சேர்ந்த சுரேஷ்குமார், ரவி ஆகியோர் அவரின் நண்பர்கள் என்றும் மேற்படி பிரகாஷ்வுடன் சேர்ந்து மதுகூடத்தில் ஒன்றாக மது அருந்துவோம் என்றும் எங்களை அவருடைய சட்ட விரோதமான செயல்பாடுகளுக்கு உடன் அழைப்பார் என்றும் நாங்கள் போகமாட்டோம் என்றும் அதனால் எங்களை கேளிசெய்வார் என்றும் வழக்குச் சம்பவம் நடந்ததிற்கு 02 வாரம் முன்பாக மதிவாணன், கண்ணன், ஜீவா, மாதேஷ் ஆகியோர் மேட்டூர் பூங்கா அருகே நின்று பேசிக்கொண்டிருந்ததாகவும் அப்போது சிவபிரகாஷ் இருச் சக்கர வாகனத்தில் வந்து சேலத்தில் ஒரு முக்கியமாக வேலை இருக்கிறது என்னுடன் வருகிறீர்களா என்று அழைத்ததாவும் நாங்கள் வரவில்லை என்று சொல்லவிட்டதாகவும் என்னுடன் மது அருந்துவதற்கு மட்டும் வருகிறீர்கள் நான் அழைத்தால் வரமாட்டீர்கள் என்று திட்டிவிட்டு சென்றுவிட்டார் என்றும் பின்னிட்டு 10

நாட்கள் கழித்து சேலத்தில் மணி என்பவரை கொலை செய்தததது சம்மந்தமாக முசிறி நீதிமன்றத்தில் சரணடைந்துவிட்டதாக செய்திதாளில் பார்த்து தெரிந்துக்கொண்டேன் என்றும் பள்ளப்பட்டி காவல் நிலைய ஆய்வாளர் விசாரித்தபோது சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.